Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆவணி மீ 10 ஆ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 30 (26 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 233

யமஹாஏஜென்சி

உங்களுக்குத் தேவையான சகலவிதமான யமஹா உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும், திருத்தி, பிற்றிங் செய்து கொள்வதற்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்.

ஜோசப் மோட்டர் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

YAMAHA AGENCY

யமஹா அவுட்போட் மோட்டர் மீண்டும் 10-8-87 முதல் பருத்தித் துறை பிரதான வீதியில் இயங்கத்தொடங்கியுள்ளது.

ஜோசப் மோட்டர் வேக்ஸ்
யமஹா ஏஜென்சி
பிரதான வீதி,
பருத்தித்துறை.

## துப்பாக்கிப் பிரயோகம் செய்து

# மோதலைத் தடுத்தனர் இந்தியப் படையினர்

## திருமலையில் சம்பவம்

— உதயன் திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, ஆகஸ்ட் 26

திருகோணமலை மடத்தடிச் சந்தியில் தமிழ், சிங்களக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலையடுத்து, இந்திய சமாதானப்படை அமைதியை நிலைநாட்டுவதற்காகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதனையடுத்து நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த மோதல் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

திருகோணமலை நகரில் மடத்தடிச் சந்தியிலுள்ள பெரிய நிழல்வாகை மரத்தின் உச்சியில் புலிக் கொடி ஒன்று ஏற்றப்பட்டிருந்தது.

இதனை அகற்றுவதற்கு சிங்களவர் கோஷ்டி ஒன்று முயற்சித்தபோதே மோதல் மூண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொடியை அகற்றும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அதைக் கேள்விப்பட்ட தமிழ் இளைஞர் குழு ஒன்று திருமலை சிவன் கோவிலடியில் இருந்து அங்கு விரைந்து சென்றது.

இதனையடுத்து மடத்தடியில் மோதல் மூண்டது. இரு சாராரும் சரமாரியாகக் கற்களை வீசினர்.

சம்பவத்தைக் கேள்விப்பட்ட இந்திய சமாதானப் படையினர் அந்த இடத்திற்கு உடனடியாக வந்து சேர்ந்தனர்.

அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட இந்தியப்படையினர் எடுத்த முயற்சி பலிக்காமல் போனது. அவர்கள்மீதும் கற்கள் வீசப்பட்டனவாம்.

இதனையடுத்து சமாதானப் படையினர்வானத்தை நோக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

இதனையடுத்து கூட்டம் கலைந்து சென்றது.

இந்தச் சம்பவத்தில் மூன்று பெரும்பான்மை இனத்தவர்கள் காயமடைந்தனர். அன்றிரவு மடத்தடிச் சந்தியிலுள்ள தமிழர் ஒருவரின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஓம் பொலிஸும் இல்லை, பெடியளும் இல்லை. போற போக்கில கொள்ளை அடிக்கிறவை சாதனை மட்டுமென்ன ''கின்னஸ்'' புத்தகத்திலை இடம் பிடிச்சாலும் ஆச்சரியமில்லை!

## இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு அனைத்து இயக்கங்களுமே காரணம்

### ஈ. என். டி. எல். எப். தலைவர்பேட்டி

— அலுவலகச் செய்தியாளர் க இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஆக. 26

இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஒன்று உருவாவதற்கு முக்கியமாக விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து இயக்கங்களுமே காரணமாகும்.

ஒப்பந்தத்தில் இருந்த சில குறைபாடுகளும் சட்டப் பிரச்சினையும் நீக்கப்பட்டதற்குரிய பொறுப்புதமிழர் விடுதலைக் கூட்டணியைச்சாரும்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல் எப்.) தலைவர் திரு. ராஜன் உதயனுக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார். திருகோணமலை வவுனியா, கிளிநொச்சி, வடமராட்சிப் பகுதிகளை ஒவ்வொன்றாக ஸ்ரீ லங்கா இராணுவம் கைப்பற்றியது.

இறுதியில் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றுவதற்கு ஸ்ரீ லங்கா இராணுவம் முயன்றுகொண்டிருக்கையிலேயே இந்தியா தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கேள்வி:- நீங்கள் யாழ்ப்பாணம் வந்ததன் நோக்கம் என்ன?

பதில்!- ஸ்ரீ லங்கா இராணுவ அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும், எமது இயக்கத் தோழர்களையும் அரசியல் பிரமுகர்களையும் சந்திக்கவுமே.

கேள்வி:- விடுதலைப் புலிகளுக்கும் உங்களுக் இடையிலான உறவுகள் எப்படி உள்ளன?

பதில்;- விடுதலைப் புலிகளுக்கும் எமக்கும் எந்த விதமான கருத்து முரண்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்புக்காவல் கைதிகளை விடுவிக்கக்கோரி

# இந்தியப்படை அலுவலகங்கள் முன் தொடர் உண்ணாவிரதம்

### இன்று திருமலையில்

திருகோணமலை, ஆக. 26

பூஸா, பெலவத்தை முகாம்களில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை விடுதலை செய்யக் கோரி ஏற்கனவே விடுதலையானவர்கள் தொடர் உண்ணாவிரதம் ஒன்றை இந்திய சமாதானப் படை அலுவலகங்களின் முன்னால் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரி இன்று திருகோணமலை நகர மண்டபத்தின் முன்னால் அடையாள உண்ணாவிரதம் ஏற்கனவே விடுதலையானவர்களினால் நடத்தப்படுகின்றது.

இதற்கு இந்திய சமாதானப்படையினர் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்திலேயே மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மாவட்டங்களில் உள்ள இந்தியசமாதானப்படை

(6ஆம் பக்கம் பார்க்க)

### மடத்திலிருந்து திடீரென

## காஞ்சி பீடாதிபதி வெளியேறினர்!

சென்னை, ஆக. 26

காஞ்சி காமகோடி பீடாதிபதியாக33ஆண்டுகளாக அருளாட்சிபுரிந்து வந்த ஸ்ரீ ஜயேந்திர சந்திரசேகர ஸ்வாமிகள் கடந்த ஞாயிறு அதிகாலை கமண்டலத்தையும் தண்டத்தையும் விட்டு விட்டு காஞ்சி மடத்தில் இருந்து வெளியேறி விட்டார்.

ஸ்வாமிகள் எங்கே இருக்கிறார் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

அவர் ஆந்திரமாநிலத்தில் குண்டூர் மாவட்டத்தில் பலநாடு பகுதியில் இருக்கலாம் என்று ஒரு செய்தி கூறுகின்றது.

ரிஷி கேசத்தில் புதிய மடம் ஒன்றை அவர் ஸ்தாபிக்கக் கூடும் என்று இன்னொரு செய்தி கூறுகின்றது.

இதனிடையில் புதிய காஞ்சி காமகோடி பீடாதிபதியாக 18 வயதுநிரம்பிய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சந்திரசேகர ஸ்வாமிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.



காஞ்சி மடத்தின் 70 ஆவது பீடாதிபதியாகும் அருள் இவருக்குக்கிடைத்துள்ளது.

இத்தகவலை ஸ்ரீ ஜயேந்திர சந்திரசேகர ஸ்வாமிகளுக்கு மூன்னைய பரமாசாரியரான ஸ்ரீ சந்திரசேகர சங்கராச்சாரிய ஸ்வாமிகள் எழுத்துமூலம் அறநிலைத்துறை ஆணையாளரிடம் அறிவித்தார்.

### சுபநேரம்

26-8-1987

புதன்கிழமை

சுபநேரம்:-
4.35 முதல் 6.05 வரை

ராகுகாலம்:-
12 05 முதல்-1 35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## "திரீ ஸ்ரார்" என்பது விஷமப் பிரசாரமே

### அப்படிஎதுவும் இல்லைஎன்கிறர் ஈ. என். டி. எல். எப். தலைவர்

யாழ்ப்பாணம், ஆக. 26

''திரீ ஸ்ரார்'' என்ற பெயரில் இயக்கம் எதுவும் உருவாக்கப்பட்டதோ அல்லது இயங்கியதோ இல்லை ஸ்ரீலங்கா அரசின் விஷமத்தனமான பிரசாரமே.

இவ்வாறு ஈ. என். டி. எல். எப். தலைவர் திரு. ராஜன் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிலோ அல்லது இந்தியாவிலோ இப்படியான பெயரில் எந்த இயக்கமும் இடையாது.

இலங்கைக்கு வந்த பின்புதான் இதைப்பற்றிக் கேள்விப்பட்டோம்.

தமிழ் நாட்டில் புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எப், எல். ரி. ரி. ஈ. ஈரோஸ் இவைகளைத் தவிர வேறு எந்த இயக்கமும் கிடையாது.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

### திருமலைக் கிராமங்களில்

## மீளக்குடியேறும் தமிழருக்குத் தொல்லை

திருகோணமலை, ஆக. 26

திருகோணமலைமாவட்டத்தில் மீண்டும் குடியேறும் தமிழர்களுக்குப் பெரும்பான்மை இனத்தவர்கள் தொல்லை கொடுப்பதாக இந்திய அமைதிப்படைக்குமுறையிடப்பட்டுள்ளது.

வீடுகளுக்குக் கல்எறிந்தும், எச்சரிக்கை செய்தும் தொந்தரவு கொடுக்கின்றார்கள்.

பாலையூற்று, அன்புவழிபுரம், கன்னியா ஆகிய பகுதிகளில்தான் இத்தொந்தரவுகள்இடம் பெறுவதாக முறையிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் திருகோணமலைப் பிரசைகள் குழுவுக்கும் திருகோணமலை நகர மண்டபத்தில் இந்திய அமைதிப் படையினர் நிறுவியுள்ள பொதுசனத் தொடர்பு நிலையத்திலும் முறைப்பாடுகளை பதிந்துள்ளனர். (உ-எ-150)

### ஆறுமுகநாதன் கொலை:

## மூன்று சிங்களவர் விளக்க மறியலில்

திருகோணமலை, ஆக. 26

கடந்த ஆறும் திகதி திருகோணமலை நகரில் இடம்பெற்ற ஆறுமுகநாதன் கொலை தொடர்பாக சிங்களவர் மூவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புலிக்கொடி ஏற்றியசம்பவம் ஒன்றின் போது ஆறுமுகநாதன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். (உ-எ-150)

## நல்லூர் திருவிழாவில் கொள்ளையர் சாதனை!

யாழ்ப்பாணம் ஆக. 26

நல்லூர் உற்சவகாலத்தின் 26 நாட்களிலும் மொத்தமாக 26 சங்கிலிகளும், 6 தாலிக் கொடிகளும் களவாடப்பட்டதாக முறையீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் 50 இற்கு மேற்பட்ட சங்கிலிகளும் 15இற்கு மேற்பட்ட தாலிக்கொடிகளும் பல கைக்கடிகாரங்களும் களவாடப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

தமது நகைகளைப் பறிகொடுத்த பலர் இது பற்றி யாருக்கும் அறிவிக்காமலேயே சென்றுவிட்டனர்.

நேற்றைய பூங்காவனத் திருவிழாவிலும் ஒரு தாலிக்கொடி இரு சங்கிலிகள் களவாடப்பட்டன.

எனினும் இது பற்றி யாழ் மாநகர சபை அலுவலகத்தில் முறையிடப்படவில்லை. (உ-7)

### மட்டக்களப்பில்

## நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம், ஆக. 26

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்கக் கோரி நேற்று மட்டக்களப்பில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஆயிரக் கணக்கானோர் இப்பேரணியில் பங்குபற்றினார்கள்.

மட்டக்களப்பு காந்தி சிலையருகே ஆரம்பமான பேரணி ஊறணியை அடைந்து மீண்டும் காந்தி சிலையருகே முடிவுற்றது.

பூஸா உட்பட பல்வேறு சிறை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பெற்றோர்களே பெருமளவில் பேரணியில் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இப் பேரணியில் பல கோஷங்கள் எழுப்பப்பட்டன. (உ)

### இந்திய இராணுவ உதவியுடன்

## ஈ. என். டி. எல். எப். உறுப்பினர் யாழ் வந்தனர்

யாழ்ப்பாணம், ஆக. 26

இந்திய இராணுவ பாதுகாப்புடன் ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி உறுப்பினர்கள்'' (ஈ. என். டி. எல். எப் ) நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

ஈ. என். டி. எல். எப் இன் தலைவர் ராஜன் முக்கிய பேச்சாளர்திரு. எம். கனகராஜா உட்பட ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்கள் ''எல்வ்'' வான் ஒன்றில் யாழ்ப்பாணம் வந்தனர்.

இந்திய இராணுவப் படையினர் இவர்களுக்கும் இவர்களது வாகனத்துக்கும் பாதுகாப்பு வழங்கினர்.

ஆயுதம் எதுவும் இன்றி வோக்கி டோக்கியுடன் மட்டும் இவர்கள் காணப்பட்டனர்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வந்தஇவர்கள் புளட் இயக்கப் பிரமுகர்களையும் ஏனைய அரசியல் பிரமுகர்களையும் பத்திரிகை ஆசிரியர்களையும் சந்தித்துபேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

சில தினங்கள் இராணுவப் பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்தில் இவர்கள் தங்கியிருப்பர் என்று தெரியவருகிறது. (இ-10)

## பேட்டிக்கு பிரதமர் மறுப்பு

கொழும்பு, ஆக. 26

காலிஜ் டைம்ஸ் பத்திரிகைக்குப் பிரதமர் பேட்டி அளிக்கவில்லை.

— இப்படி பிரதமரின் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

காலிஜ் டைம்ஸ் பத்திரிகைக்கு எந்தவிதமான பேட்டியையும் பிரதமர் அளிக்கவில்லை.

பிரதமரை மாசுபடுத்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## ● வடக்கில் மீன்பிடி தடை நீக்கம்

கொழும்பு, ஆக. 26

வடபகுதிக் கடலில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை முற்றாக நீக்கப்பட்டுவிட்டது.

எனினும் மீனவர்கள் பதினைந்து குதிரைச் சக்தி கொண்ட என்ஜின்கள் பொருத்தப்பட்ட வள்ளங்களையே மீன்பிடிக்கப் பயன்படுத்த வேண்டும் என்று அரசு தெரிவித்துள்ளது. (இ-எ)

## கடலினுள் பாய்ந்த கார்

காரைநகர், ஆக. 25

காரை நகரில் இருந்து வந்த கார் ஒன்று பொன்னாலைப் பாலத்தடியில் கடலினுள் பாய்ந்தது.

செவ்வாய்கிழமை காலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காரை நகரிலிருந்து யாழ் நோக்கி வேகமாக வந்த கார் வண்டி ஒன்றுக்கு இடம் கொடுக்க முற்பட்ட போது கடலினுள் பாய்ந்தது. ஆனால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. கார் சிறிது சேதத்திற் குள்ளாகியது. (உ-73)

## வீடுகளில் புலிக்கொடிகள்

திருகோணமலை, ஆக 26

பொது இடங்களில் புலிக்கொடிகளைப் பறக்கவிடவேண்டாம் என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( சின்னஞ் சிறு விளம்பரம் )

## விற்பனைக்கு

யோகமும், போகமும் குருஜி தவயோகி C.K.S எழுதியது. உடலும், உள்ளமும் வளம்பெற 61 யோகாசனப் பயிற்சிகள் அடங்கிய அரிய நூல், விலை ரூபா 56/- விற்பனையாளர் பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

மூன்று ஏக்கர் இருபோகம் செய்யக்கூடிய வயல் காணியும் இரண்டு ஏக்கர் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜ. கனகையா, மரயடித்தகுளம், ஓமந்தை. (1565)

## தேவை

இரண்டு அறை கொண்ட வீட்டின் ஒரு பகுதி, வர்த்தக நிறுவனமாக இயங்குவதற்கு, யாழ்நகரில், மெயின் வீதி,முதலாம், மூன்றும், நான்காம் குறுக்குத் தெருக்கள், சப்பல் வீதி, ரெம்பிள் வீதி ஆகிய ஏதாவது ஒரு பகுதியில் தெருவை அண்மியதாக வாடகைக்குத் தேவை. விளம்பர எண் - 63, பே/பா, உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1551)

கணக்கியலில் பயிற்சி பெற்றபெண்கள்தேவை. உடன் நேரில் வரவும். கொழும்பு ஸ்ருடியோ, 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (1500)

உங்கள் தேவைகளை உடனுக்குடன் குறைந்த செலவில் குறித்த நேரத்தில் செய்து கொள்ள யாழ் நகரில் முதன்மை நிறுவனம் கிளீன்கட். எங்களிடம் சகல அளவுகளிலான போட்டோ ஸ்ரட், தெளிவான றேனியோ பிரதிகளையும் தமிழ்,ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் எவ்வேளையிலும் பெற்றுக் கொள்ளலாம் உங்களின் திருப்தியே எமது சேவை. "கிளீன்கட்" இல. 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (763)

### திருமண சேவை

கடந்த 20 வருடகாலமாக நேர்மையுடனும் கண்ணியத்துடனும் பல திருமணங்களை நிறைவேற்றி முன்னோடியாகத் திகழும் சாயி மங்களம் இன்றும் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வைக்கும். இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கடமையாற்றுபவர்களுக்கு அவரவர் தராதரத்திற்கேற்ற மணமக்களைத் தெரிவு செய்துகொள்ள முடியும். விபரங்களுக்கு: சாயி மங்களம், 32, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (1567)

### இடம் மாற்றம்

கொழும்பு ஸ்ருடியோ ஸ்ரான்லி வீதி, 20-8-87 முதல் (வெலிங்டன் சந்திக்கு வடக்கே) 55. மணிக்கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. (1500)

### மணப்பந்தல்

யாழ். மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவவேளாள குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய B. Sc I. C. M. A. கணக்காளராக U. S. A. இல் கடமையாற்றுபவருக்கு B Sc. I. C. M. A. மணமகள் விரும்பத்தக்கது. விபரங்களுக்கு: கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சாயி மங்களம், 32, இந்துக்கல்லூரி ஒழுங்கை,வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (1567)

### றேனியோ

சகலவித அச்சு வேலைகட்கும் தட்டச்சு, றேனியோ, பிரதிகளை விரைவாகவும் சிறப்பாகவும் செய்து கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம் தயா அச்சகம், 138, நாவலர் வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம். (1562)

### மியாமியில் வெற்றிடம்

தையற் கலையில் தனியிடம் பெற்றிருக்கும் மியாமி காமென்ஸ் ஸ்தாபனத்தாருக்குத் தையலில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. மியாமி காமன்ஸ், 40, ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம், (1566)


## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

ஆரம்பிக்கும்

✯ வெளிவாரி ✯

பட்டப்படிப்புக்கள்

● கல்வியாண்டு 88/89 ●

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப் படிப்புக்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் செப்டம்பர் 7 ஆம் திகதி (07-09-87) ஆரம்பமாகின்றன

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

✯ கலைமாணி (B.A)

✯ வர்த்தகமாணி (B Com.)

✯ விஞ்ஞானமாணி (B.Sc) (கணிதம்)

விண்ணப்பங்கள் ஒகஸ்ட் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும் விபரத்திரட்டினையும் பெற "பதிவாளர்" "அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்" என்ற பெயருக்கு ரூபா 10 ற்கான காசுக் கட்டளையுடன் 9"X11" அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை சனி, ஞாயிறு தினங்களில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர் -

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)


கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட

# மீன்பிடி வள்ளங்களின் இயந்திரங்கள் மீண்டும் கிடைக்கும்

வடமராட்சி, ஆக. 26 கடந்த காலங்களில் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட வள்ளங்கள், கட்டுமரங்கள் போன்றவற்றின் இயந்திரங்களை மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கான முயற்சிகளை வடமராட்சி புனரமைப்பு அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு செல்வச்சந்திரன் மேற்கொண்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் இவருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளது.

கடற்படையினரின் பற்றுச்சீட்டு இல்லாதவர்களும், பற்றுச்சீட்டைத் தவறவிட்டவர்களும் சத்தியக் கடதாசி தயாரிப்பதற்குரிய ஆவணங்களுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகிறது. (வ-160)

## கால்நடை இனவிருத்தி சேவை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 26 கடந்த மாதம் 20ஆம் திகதியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த கால்நடை இனவிருத்தி சேவைகள் இன்றுமுதல் ஆரம்பமாகின்றன.

இன்றுமுதல் மேற்படி சேவைகள் உரும்பராய் கிராமஅபிவிருத்திச்சபை அலுவலகத்தில் ஆரம்பமாகும்

இவ்வாறு உரும்பராய் கிராம அபிவிருத்திசபை செயற்குழு இணைப்படுத்துநர் அறிவித்துள்ளார்.

ஏனைய இடங்களிலுமுள்ள கால்நடை இனவிருத்தி சேவைகளும் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ( -7)

## கொடிகாமம் கொத்தணி

கொடிகாமம் திருநாவுக்கரசு மாவித்தியாலயம் கொடிகாமம் கொத்தணியின் தலைமைப் பாடசாலையாக இயங்கும்.

இக் கொத்தணியில் அல்லாரை அ. த. க. பாடசாலை, கச்சாய் அரசினர் வித்தியாசாலை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்—

போக்கட்டி அ.த.க. பாடசாலை, போக்கட்டி ஆர். சி. பாடசாலை மந்துவில் ஆர் சி. பாடசாலை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாசாலை, மந்துவில் அ.த.க. பாடசாலை, கொடிகாமம் அரசினர் பாடசாலை என்பன இயங்கும்.

கொத்தணி அதிபராக திரு. ச. சின்னத்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ 75)

தொல்புரம் விவசாயிகளுக்கு

## கட்டுப்பாட்டு விலையில் உர விநியோகம்

அராலி, ஆக. 26 தொல்புரம் கமநல சேவை நிலைய எல்லைப் பரப்பில் உள்ள விவசாயிகள் தொல்புரம், அராலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள உரக் களஞ்சியங்களில் இருந்து தங்களுக்குத் தேவையான VI உரக்கலவை, யூரியா போன்ற உர வகைகளைக் கட்டுப்பாட்டு விலையில் தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகள் தங்கள் தங்கள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தங்களுக்குத் தேவையான உரங்கள், மற்றும் மரக்கறி விதைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு தொல்புரம் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு பி. குசைப்பிள்ளை அறிவிக்கின்றார். (ஒ-12)


★ கலர் பிலிம்சுருள்களை இரண்டு நாட்களில் Processing — Printing நவீனமுறையில் செய்து தருபவர்கள்

✯ கொழும்பு ஸ்ருடியோ ✯

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

★ ஐந்து(5) அதிஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர் பிலிம் சுருள் இனாம்.



# பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா

✯ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடமுண்டு (வயது 22, 35)

| | | |
|---|---|---|
| 1. INDUSTRIAL ELECTRICIAN | — 3 — | 600 S. R. |
| 2. CABLE JOINERS | — 3 — | 700 S. R. |
| 3. LINES MAN | — 3 — | 600 S. R. |
| 4. HEAVY EQUIPMENT OPERATORS | — 1 — | 650 S. R. |
| 5. ACCOUNTS CLERK | — 3 — | 600 S. R. |
| 6. MACHANIC DIESEL and PETROL | | 700 S R |
| 7. LABOURERS | — 32 — | 350 S. R. |

(சாப்பாடு இருப்பிட வசதியுடன்)

## ★ லெபனன் --- Cleaners

1. ஆண்கள் 20 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச்சம்பளம் 3,500/, ரூபா (சாப்பாடு இருப்பிடத்துடன்)
2. பெண்கள் 20 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச் சம்பளம் 2,500/- ரூபா (சாப்பாடு இருப்பிடத்துடன்)

## ★ சவூதி அரேபியா Security Guards

5 வருஷ படைவீரர் அனுபவம் தேவை. அடிப்படைச் சம்பளம் 600 S. R வயது (30 - 35)

## II. American Company (JEDDHA)

(A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் மட்டும் 500 S. R. இவர்களது பயண ஒழுங்குகள் 15-09-87 இற்கு முன்னர் செய்து கொடுக்கப்படும்.

(B) CARPENTERS 25 வயதிற்கு மேற்பட்டோர் உடன் தேவை

(C) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 S. R.

## ★ IRAQ ★

(HOSPITAL CLEANERS JAPANESE COMPANY)

● 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் சம்பளம் இருப்பிட வசதியுடன் 65 டினார்

● ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்களுக்கு 31 ஆம் திகதிக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

★ T. இந்திரநாதன் ★

M. THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)



# HORIZON ENTERPRISES

## பிரயாண ஒழுங்குகள்

## A. பத்மதாஸ்

குவைத் நாட்டிற்கு குறுகிய நாட்களுள் அனுப்பி வைக்கக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம். நாம் மேற் கொள்ளும் அனைத்து நாடுகளுக்கான வேலை வாய்ப்பும் உதவி முகவர் நிலையமின்றி நேரிலேயே அனுப்பும் [Main] தலைமை முகவர் நிலையம் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே சந்தேகத்தைத் தவிர்த்து எவ்வித அச்சமுமின்றி விரையுங்கள்.

முக்கிய அறிவித்தல்:-

(PANTA SUPER MARKET) பன்ரா சுப்பர் மாக்கெட் மேற்பார்வையாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரின் பெயர்களும் கீழே பிரசுரிக்கப்படுகின்றன. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு தலைமைக் காரியாலயத்தினுல் வெளி நாட்டு முகவருடாக நடைபெற இருப்பதால், உடனடியாக எமது யாழ் - தலைமைக் காரியாலயத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு எமது யாழ் தலைமை காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். இப்பதவிக்கு மேலதிக வெற்றிடங்கள் இருப்பதால் புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

1. விஞயகமூர்த்தி சித்திவிஞயகம், 7ம் வட்டாரம், மண்டைதீவு.
2. பொன்னையா பலேஸ்வரன், இல. 384, ஆலய வீதி. நல்லூர்.
3. இராசரத்தினம் தெய்வேந்திரம், வாதரவத்தை, புத்தூர்.
4. வல்லிபுரம் கதிரேசன் அசோகன், லவ்லேன். உடுவில், சுன்னுகம்.
5. பொன்னையா சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.
6. பஞ்சாட்சரம் ராஜயோகி, மே. பா. வீரசிங்கம், தபால் அதிபர், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
7. ரத்னம் மாணிக்கராஜா, 'அம்மா இல்லம்', கைதடி, நுணுவில், சாவகச்சேரி.
8. சில்வெஸ்ரர் எயூனியஸ்,பயஸ் குலஸ்,பிரதான வீதி,8ம்வட்டாரம், பேசாலை.
9. சுப்பிரமணியம் மாணிக்கவாசகர், 261/7, கொழும்பகம் வீதி, யாழ்ப்பாணம்.
10. சுப்பையா சுந்தரலிங்கம், சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
11. சின்னத்தம்பி லோகேஸ்வரன், மாதகல், கிழக்கு, மாதகல்.
12. மாசிலாமணி மகேஸ்வரன், யாழ்ப்பாணம்.
13. சோமலிங்கம் யசோதரன், யாழ்ப்பாணம்.
14. ஐயாம்பிள்ளை பவானந்தன், இறுமாத்தோட்டம், கட்டைவேலிலேன், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
15. இறேசியஸ் இன்பராஜ் பொன்ராஜ், ராஜ்மகால், கரவெட்டி.
16. செல்லையா பாலரட்ணம், ரட்ணமாளிகை உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
17. கணபதிப்பிள்ளை செல்லப்பா. மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.
18. நடராஜா கணேஸ்வரன், தும்பளை, பருத்தித்துறை.
19. நாகலிங்கம் ஜெயானந்தராஜா, யாழ்ப்பாணம்.
20. பரராஜசிங்கம் சிறீபாலச்சந்திரன், 886, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
21. நவரட்ணராஜா சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.

உணவு இருப்பிடவசதி இலவசம். பாஸ்போட், 16 புகைப்படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். முற்பணம் அறவிடப்பட மாட்டாது.

சாரதி அனுமதிப் பத்திரம்.

வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கும், வாகனம் செலுத்தத் தெரியாதவர்களுக்கும் வாகனம் செலுத்தப் பழக்கியும் 3 நாட்களில் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். எமது முகவர் நிலையத்திஞல் வெளிநாடு செல்பவர்களுக்கு மட்டுமே இச் சலுகை வழங்கப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டுமே வேலை வாய்ப்புடன் பிரயாண ஒழுங்குகள் செய்யும் பிரதான முகவர் நிலையம்.

பிரதி வாரமும் பிரயாணம் செய்தவர்களின் பெயர் விவரங்களை வெளியிடும் ஒரேயொரு பிரயாண முகவர் நிலையம்.

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை எமது அலுவலகம் திறந்திருக்கும். கடித மூலம் விபரம் பெற விரும்புவோர், சுய விலாசம் இட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ளவும்.

A. பத்மதாஸ்

97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொழும்பு சென்ற புலிகளின் பிரதிநிதிகளுக்கு நடந்ததுஎன்ன?

வடமராட்சி "ஒப்பரேஷன் லிபரேஷன்" நடவடிக்கையின் போது வீரமரணம் அடைந்த 2 ஆவது லெப். யூசி, கப்டன் அலன் 2ஆவது லெப்: நம்போலிவா, கப்டன் வீமன், செட்டி கஜன், லோகன் ஆகியோரின் 90ஆவது நாள் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன் தினம் இரவு வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் யோகி, திலீபன், காசிஆனந்தன் ஆகியோரின் உரைகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

**தொகுத்துத் தருபவர்:**
**சி. சுந்தரலிங்கம்.**

## யோகி

இலங்கையும், இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான சுயநல ஒப்பந்தம் ஆகும்.

இந்த ஒப்பந்தத்தால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

நாம் எமது இனத்தின் விடுதலைக்காக, ஈழ விடுதலைக்காகப் போராடுகின்றோம்.

பாதிக்கப்பட்டவரையும் பாதிப்புச் செய்தவரையும் வைத்துத்தான் ஒப்பந்தங்கள் செய்யப்படுவது உலக இயல்பு. ஆனால் ஜூலை 29 இல் கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தைப் பார்க்கும் போது இந்த நியாய பூர்வமான உலக மரபு மீறப்பட்டுள்ளது.

### கொழும்பில்

அண்மையில் எமது இயக்கப் பிரமுகர்கள் ஆலோசனைக்காகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டார்கள்.

நாமும் மக்களின் விமோசனத்தைக் கருத்தில் கொண்டு அங்கு சென்றோம்.

ஆனால் அங்கே நடைபெற்ற கலவரங்களைக் காட்டி ஜே ஆரின் பாதுகாப்புக் குறித்தே கருத்துடன் இருந்த டிக்ஸிற்றும் இந்திய உயர் அதிகாரிகளும் காலம் கடத்த முனைந்தார்கள்.

நாம் விடாப்பிடியாக எமது வடக்கு- கிழக்கு இணைப்புப் பற்றியும்— திருகோணமலை போன்ற இடங்களில்நடைபெற்று வரும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் வன்செயல்கள் பற்றியும் கூறினோம்.

அதற்கு டிக்ஸிற் நீங்கள் கேட்கும் அனைத்தையும் நாம் தற்போது ஜே ஆரிடம் கேட்டால் நாளை அவர் உயிருடன் இருக்கமாட்டார் என்றார்.

தற்போது அவரைக் காப்பதே தமது கடமை என்றும் டிக்ஸிற் கூறினார்.

இப்படியானவர்களின் கருத்தில்நாம் நம்பிக்கை வைக்க முடியாது. நாம் வந்து விட்டோம்.

## திலீபன்

ஆசியாக் கண்டத்தில் அதிகவல்லமை படைத்த இந்திய இராணுவத்தையே நான்கு நாட்கள் முகாமுக்குள் முடங்கச் செய்தவர்கள் எம்மக்கள்.

எமது போராட்டம் உச்சக்கட்டத்தை அடையும் நேரம் எமது ஆயுதங்களை இந்திய அரசு பறித்து எம்மை நிராயுதபாணிகளாக்கியது.

எதிரிக்கு இந்திய சறுப்புப் பூனை இராணுவப் பாதுகாப்பு அளிக்கின்றது.

ஜே. ஆரை மட்டுமல்ல. சர்வ வல்லமை படைத்த இந்தியப் பிரதமரையே கொலை செய்ய முனைந்த கும்பலின் முன் நிராயுதபாணிகளான தமிழரின் நிலை எப்படி இருக்கும் என இந்திய அரசு சிந்தித்துப்பார்க்குமா?

நாம் மக்களை முழுமையாக நம்பினோம். ஆனால் மக்கள் முழுமையான ஒத்துழைப்பை எமக்குத்தரவில்லை.

இந்த ஒத்துழைப்பு இன்மையால்தான் இன்று எம் போராட்டம் பின்தள்ளப்பட்டது.

ஆனால் புலிகள் தூங்க மாட்டார்கள் என்பதையும் மீண்டும் பல மடங்கு பலத்துடன் செயற்படுவார்கள் என்பதையும் மக்கள் முன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

## காசி

போராட்டம் மூலம் தமிழரின் தலைவன் யார் என்பது இன்று அகில உலகுக்கும் தெரிகின்றது. ஆனால் அது எம்மவர் சிலருக்குத் தெரிகிறதில்லை.

நானும் ஒரு முன்னாள் கூட்டணி வாதி தான். கூட்டணியின் போராட்டம் எனக்கோ மக்களுக்கோ புரியாத ஒன்று அல்ல. கூட்டணியால் மக்கள் விடிவுக்காக எதனையும் சாதிக்க முடியாது.

40 வருட அரசியல் வாழ்வில் கூட்டணியால் சாதிக்கமுடியாததை இந்தஇளம் புலிகள்நாலு மாதங்களில் சாதித்து வருகின்றார்கள்.

இது கூட்டணியினருக்குப் புரியாத ஒன்றல்ல.

ஆகவே தான் கூறுகின்றேன் உரிய சந்தர்ப்பம் வரும் இக்காலகட்டத்தில் கூட்டணியைக் கலைத்துவிட்டுத் தமிழ் ஈழம் அமைக்க தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

(இ-ஒ—160)

# இந்திய-பாக். அணு ஆயுத யுத்தம் மூண்டால்...

இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே அணு ஆயுத யுத்தம் ஒன்று ஏற்பட்டால்...

புதுடில்லியில் ஐந்நூறு பேரில் ஒருவர் தான் உயிர் பிழைப்பார்.

பம்பாய், கராச்சி நகரில் 6 பேரில் ஒருவர்தான் உயிர்தப்புவார்.

உயிர்தப்புபவர்களும் அடுத்தநாள் நண்பகலுக்கு முன்னர் மரணம் அடைந்து விடுவர்.

புதுடில்லியில் சனத்தொகை 1990 இல் 91 லட்சம் பேராக இருக்கும். புதுடில்லி மேல் ஒரு மெகதொன் அணுக் குண்டு போடப்பட்டால் 18 ஆயிரத்து 600 பேர் மட்டுமே உயிர் பிழைப்பார்கள்.

புதுடில்லியில் இருந்து 2 ஆயிரம் கிலோ மீட்டரில் காராச்சி உள்ளது.

1990 இல் 83 லட்சம் மக்கள் கராச்சியில் வாழ்வர்.

அணுக் குண்டு ஒன்று போடப்படின் 62 லட்சம் பேர் அந்தக் கணமே மடிவர். தப்பிப் பிழைப்பவர்களும் சில மணித்தியாலங்களில், தினங்களில் மடிந்து விடுவர்.

இலினியோஸ் பல்கலைக் சழகத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஆயுதக் கட்டுப்பாடு, ஆயுதப் பரிசரணம், சர்வதேசப் பாதுகாப்பு நிலையத்தில் பணிபுரிகின்றார் இந்திய நிபுணர் செய்யத் ரஷித் நயீம்.

அவர்தான் அணுகுண்டு யுத்தத்தின் விளைவை இப்படி மதிப்பிட்டிருக்கிறார்.

தென் ஆசியாவின் பாதுகாப்பு என்ற தலைப்பில் நயீமீன் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுரையின் தலைப்பு 'இந்திய — பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான அணுயுத்தம்'— என்பது (ஒ-எ)

# அமிருக்கு அகவை 60

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம்இன்று (26.8.87) தமது அறுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

இளமைக் காலம் தொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டு, இளம் வழக்கறிஞராக இருந்தவேளை அரசியல் வாழ்க்கையில் அடி எடுத்து வைத்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களில் முன்னணி வகித்தும், அவற்றை முன்னெடுத்தும் சென்ற பெருமை திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு உண்டு.

அவரது 60 ஆவது பிறந்த நாளில் அரசியல் சேவைகள் நினைவு கூர்வது பொருத்தமானதே.

1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதிஇலங்கை நாடாளுமன்றத்திலே சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட போது காலிமுகக் கடற்கரையிலே தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்திலே திரு. அமிர்தலிங்கம் அவர்களும் முக்கிய பங்கேற்றார். அந்நேரத்தில் சிங்களக் காடையர்களின் பாரிய தாக்குதலுக்கு ஆளானதோடு அவர்கள் எறிந்த கல்லொன்றினால் தலை உடைபட்டு இரத்தம் சிந்திய நிலையிலே அந்த வீரவடுவோடு நாடாளுமன்றம் சென்று சேட்டோர். அதிசயிக்கத்தக்கதாக ஒரு வீரமிகு பேச்சொன்றை நிகழ்த்தினார்.

அது மட்டுமல்ல தமிரசுக்கட்சி நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் தனது பங்களிப்பைச் செலுத்த இவர் தவறியது கிடையாது. கண்டன ஊர்வலங்களாயினும் சரி, ஹர்த்தால் ஆயினும் சரி, சட்ட மறுப்பாயினும் சரி, சத்தியாக்கிரகமாயினும் சரி, இவ்வாறு எந்த வகையான போராட்டங்களிலும் ஒரு முன்னணி வீரராக நின்று அங்கெல்லாம் தமது பங்களிப்பைச் செய்தவர் திரு. அமிர்தலிங்கம். இத்தகைய போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றதும்உண்டு.

1961 ஆம் ஆண்டு தமிழ்ப் பகுதி எங்கும் நடைபெற்ற மறியல் போராட்டத்தினை மிக வெற்றிகரமாக நடத்துவதில் திரு. அமிர்தலிங்கத்துடைய பங்களிப்பு மிகவும் முக்கியமாகக் காணப்பட்டது.

இவர் தமிழினத்தின் விடுதலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். இதனால் அவர் தமது சொந்த வாழ்வில் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சட்டத்துறையில் நுட்பமான நுழைபுலம் உடையவராக விளங்கினார். அப்புலமை காரணமாக அவர் நாடாளுமன்றத்திலே தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் திருமுகம்

# வரியிறுப்பாளர் சங்கம் அமைப்பது அவசியம்

அண்மையில் நடந்து முடிந்த யுத்தத்துக்குக் களம் தமிழர் பிரதேசம்; யுத்த பாதிப்புக்குள்ளான மக்கள் இங்கு வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள். இவர்கள் யாவரும் பலவித இன்னல்கள், அச்சுறுத்தல்கள், பேரழிவுகளுக்கு ஆளானவர்கள், மிகவும் கூடிய மனவேதனையை அநுபவித்தவர்கள் நடுத்தர, மேல் - நடுத்தர மட்டத்தில் உள்ள வருமானவரி செலுத்தும் மக்கள் என்றால் மிகையில்லை.

ஒரிரு துறைகளில் உள்ளவர்கள் மாத்திரமல்லாது, பல்துறைகளிலும் உள்ள வரியிறுப்பாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். குறிப்பாக, நாட்டிற்கு அத்தியாவசியமான வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக் கொடுத்த ஏற்றுமதி முதலீட்டாளர்கள், நாட்டின் இறக்குமதியை ஈடுசெய்யும் உள்ளூர்க் கைத்தொழில் உற்பத்தியாளர், விவசாயிகள், மீன்பிடித் துறையினர் மற்றும் வியாபாரிகள், போக்குவரத்துத் துறையினர் ஆகியோரின் பாதிப்புக்கள் யாவும் கணக்கெடுக்கப்பட்டு உரிய நிவாரணம் பெற ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமும், அவசரமும் ஆகும்.

இப்பகுதி மக்கள் தமது பாதிப்புக்களைச் சீர்வரிசைப்படுத்தி அரசாங்கத்தின் கவனத்திற்குக் காலந்தாழ்த்தாது கொண்டு வந்தாலன்றித் தகுந்த, உரிய நிவாரணம் இவர்களுக்குக் கிடைக்குமா என்பது சந்தேகமே.

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தின் போது கொழும்பு, மற்றும் சில பகுதிகளில் பாதிப்படைந்தவர்களுக்கு "றிப்பியா" நிறுவன மூலம் விசேட வருமானவரி விலக்கு மூலமும் உடன் நிவாரணம் வழங்கப்பட்டதை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருதல் தகும். அதுபோன்ற நிவாரணம் பெறுவதோடமையாது மேலும் பல நிவாரணங்களை அரசாங்கத்திடம் பெறவேண்டிய மோசமான நிலையில் இப்பிராந்திய வரியிறுப்பாளர்கள் உள்ளனர்.

இந்த நிவாரண வேண்டுதல்கள் தனிநபர் வேண்டுதலாகஇராது, ஒன்றிணைந்த ஓர் அமைப்பின் வேண்டுகோளாக அமைந்தால் நிச்சயம் கூடிய அக்கறையும், கவனமும் உரியவர்களால் எடுக்கப்பட்டுச் சாதகமான விளைவுகள் ஏற்பட இடமுண்டு: எனவே ஒரு வரியிறுப்பாளர் சங்கம் எமது பகுதிக்கென அமைக்கப்பட வேண்டியது அவசியம்.

ந. கருணை ஆனந்தன்
யாழ்ப்பாணம் (முன்னாள் சிரேஷ்ட வரிமதிப்பாளர்)

## சீன அரசின் நல்லொழுக்க முன்மாதிரி

சீனப் பெண்ணுடன் ஹோட்டல் அறை ஒன்றில் காணப்பட்ட அமெரிக்க வர்த்தகர் ஒருவரை சீன அரசு உடனடியாக வெளியேற்றியது.

சீன அரசின் நல்லொழுக்க விதிகளை மீறிய செயல் இது — இப்படி சீன அரசு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

சீனப் பெண்ணை அறைக்குள் அழைத்துச் செல்ல வேண்டாம் என்று ஹோட்டல் பணியாளர்கள் கூறியும் அமெரிக்க வர்த்தகர் செவி சாய்க்கவில்லை.

அன்று இரவு ஹோட்டலை முற்றுகையிட்ட பொலீஸார் அறைக்குள் புகுந்து வர்த்தகரையும் சீனப் பெண்ணையும் அழைத்துச் சென்றனர்.

வர்த்தகர் நாடு கடத்தப்பட்டார். சீனப்பெண்ணுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

பெரும்பாலும் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பார் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமணமாகாதபெண்களுடன் ஆண்கள் தொடர்பு வைப்பது சட்ட விரோதமானது என்று சீன அரசு ஏற்கனவே சட்டமியற்றியுள்

(5 ஆம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

**குறள்:**

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

**பொருள்:**

சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்றிச் செய்யவேண்டும்; அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவர்க்கு ஏழு பிறப்பிலும் நன்மை இல்லை.

# அரசோலோ குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளார்

நெற்பயிரைத்தாக்கும் குதிரைவாற் புல், மொண்டி, மாருத்து, கோழிச்சூடன் ஆகியகளைகளும் அவற்றின் விதைகளும் அகால மரணத்துக் குள்ளாகி இருக்கின்றன. இவர்களின் மரண பரிசோதனையின் போது இதற்குக் காரணம் அரசோலோ வென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரசோலோ அங்லோ-ஏஷியன் பேர்டிலைசர்ஸ் ஸ்தாபனத்தினால் சந்தைப்படுத்தப்படும் ஓர் நவீன களை கொல்லி. எல்லா பீடைநாசினிகளும் அபாயகர மானவை கவனமாகக் கையாளவும். (தகவல் தந்தவர் ஸ்ரோபர் தகவற் பகுதி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

# ரயில்வே பகுதிக்கு மட்டும் 4 கோடி ரூபா நஷ்டம்

## தபால் ரயில் இப்போதைக்கு இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 26
யாழ் மாவட்ட ரயில்வே பகுதிக்கு கடந்த இரண்டு வருடங்களில் நான்குகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல ரயில் நிலையங்களிலும் தளபாடங்கள் உட்பட பல பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப் பட்டுள்ளன.

காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டிருந்ததன் காரணமாக அங்கு ஏனைய ரயில் நிலையங்களில் ஏற்பட்ட சேதங்களை விடப் பல மடங்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

யாழ்- மாவட்டத்தில் நீண்ட தூரத்துக்கு ரயில் தண்டவாளங்களும் பெருமளவில் நீக்கப்பட்டிருந்தன.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கு இம்மாத முடிவில் யாழ்தேவி ரயில் காங்கேசன்துறை வரை சேவையில் ஈடுபடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

எனினும் தபால் ரயில் சேவை மேலும் சில காலத்துக்குத் தாமதமாகலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரயில் நிலையங்களில் தொடர்புச் சாதனங்கள் இல்லாதிருப்பதன் காரணமாகவே தபால் ரயில் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசிச் சேவை சீரடையும் பட்சத்திலேயே அதிகளவு ரயில் சேவைகளை யாழ்ப்பாணத்துக்கு நடத்தமுடியும் என ரயில்வே உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தகவல் தெரிவித்தார்.

யாழ்-மாவட்ட ரயில் நிலையங்களில், தொடர்புச் சாதனங்களோ, சமிக்ஞை விளக்குகளோ ரயில் சாதனங்களோ சீரான நிலையில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ-10)

## குரும்பசிட்டியில் 332 குடும்பங்கள் விடிழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 26
அண்மையில் இடம்பெயர்ந்த இராணுவக் கெடுபிடிகளால் குரும்பசிட்டிப் பகுதியில் 332 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை முற்றாக இழந்துள்ளன.

256 குடிசைகளும், 76 கல்வீடுகளும் இங்கு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இங்கு வசித்த குடும்பங்கள் தற்பொழுது மாதகல், பண்டத்தரிப்பு போன்ற இடங்களில் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

குடிசைகள் அழிக்கப்பட்ட 256 குடும்பங்களுக்கும் உடனடியாக தலா 6 ஆயிரம்ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடும்பங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கும் 120 ஏக்கர் நிலத்தில் இருப்பிடங்களை அமைத்துக் குடியேற்றவும், அங்கு அவர்கள் விவசாயம் செய்ய ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (உ-7)

## பயிற்சியும் கருத்தரங்கும்

சாவகச்சேரி, ஆக. 26
அறவழிப் போராட்டக் குழுவினரால் நடத்தப்படும் யாழ் மாவட்ட அறவழிச் சிறுவர் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான ஒருநாள் பயிற்சியும் கருத்தரங்கும் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

அ. போ. குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியை நவீல்ட் பாடசாலை உப அதிபர் திரு. கோபாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள தீபமேற்றித் தொடக்கி வைத்தார்.

திரு. சி. எஸ். தங்கவேலுவின் வரவேற்புரையை அடுத்து குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் இயக்குநர் திரு. வி. ஜி. தங்கவேல் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

27 அறவழிச் சிறுவர் கழகங்களில் இருந்தும் சுமார் நூறு பிரதிநிதிகள் பங்குபற்றினர். (இ-31)

# இலட்சியத்தை அடையும் வரை போராட்டம் தொடரும்

## புலிகள் தளபதி கூறுகிறார்

திருகோணமலை, ஆக. 26
எமது போராட்டம் இத்துடன் முடிவடைந்துவிடவில்லை. எங்கள் இலட்சியத்தை அடைய வேறு வழியில் போராட்டம் தொடரும். அதற்கு மக்கள் ஆதரவு தேவை.


திருமலையில் புலிகளின் ஆயுத ஒப்படைப்பின் பின்னர் நடந்தகூட்டத்திலேயே புலிகளின் திருமலை மாவட்டத் தளபதி திரு. புலேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து இந்திய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை அடுத்து நாங்கள் ஆயுதங்களை கையளிக்கிறோம்,

ஆயுதங்கள் கையளிப்பதன் மூலம் எங்கள் மக்களின் பாதுகாப்பையும் இந்திய அமைதிகாக்கும் படையினரிடம் கையளிக்கின்றோம்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் தமிழ் மக்களின் பூரண பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ளார்கள். (ஒ-150)



திருகோணமலை சிவன் கோயிலடியில் வைத்து விடுதலைப் புலிகளினால் கையளிக்கப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதியையே படத்தில் காண்கிறீர்கள்.
(படம்: திருமலை செய்தியாளர்)

## திருமலை திரும்புகின்றனர்

முள்ளியவளை, ஆக. 26
திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகள் சிறு சிறு குடும்பங்களாகத் தமது இருப்பிடங்களுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர். (எ-93)

## யாழ்நகரில் வங்கி இயக்குனர்

யாழ்ப்பாணம், ஆக. 26
இலங்கை வர்த்தக வங்கியின் நிர்வாக இயக்குனர் திரு. எட்கார் குணதுங்க யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் வங்கியின் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் பற்றி வங்கி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

இலங்கை வர்த்தக வங்கியின் நிர்வாக இயக்குனர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்தது இதுவே முதற் தடவையாகும். (உ-ஒ)

திருகோணமலை

## கோணேஸ்வர வித்தியாலய மாணவருக்குஊக்குவிப்புபரிசு

திருகோணமலை, ஆக. 26
திருகோணமலை கோணேஸ்வரர் வித்தியாலய மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக ஊக்குவிப்பு பரிசுத் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப் படவுள்ளது.

இதன்படி க. பொ. த. பரீட்சையில் சித்தியடையும் முதல் ஆறு மாணவர்களுக்கு பணம் பரிசாக வழங்கப்படும்.

1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறும் மாணவருக்குத் தலா ஆயிரம் ரூபாவும்

4ஆம், 5ஆம், 6ஆம் இடங்களைப்பெறும்மாணவருக்குத் தலா ஐந்நூறு ரூபாவும் வழங்கப்படும்

ஆறும் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடையும் ஒரு மாணவனுக்கு 500 ரூபாவும்—

2ஆம், 3ஆம் இடங்களைப் பெறு மாணவனுக்குத் தலா 300 ரூபாவும் வழங்கப்படும்.

பெற்றோர், செயலவை உறுப்பினர்கள் இத்திட்டத்துக்கு நிதி வழங்க உறுதி அறிவித்துள்ளனர்.

இத்தகவல்கள் வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டத்தில் சங்கப் பொதுச்செயலாளர் திரு. கணேசலிங்கத்தினால் வெளியிடப்பட்டன. (ஒ-எ-150)

## திட்டமிட்டபடி பாதயாத்திரை

சாவகச்சேரி, ஆக. 26
திட்டமிட்டபடி தென்மராட்சி திருத்தல் பாதயாத்திரை இம்மாதம் 28 ஆம் திகதி காலை சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம் பிள்ளை, சிவஸ்ரீ கே. ஜெகதீஸ்வரக் குருக்கள், நகரசபை ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா ஆகியோர் ஆசி வழங்கித் தொடக்கி வைப்பர். (இ-31)

இந்திய நிவாரணம்

## இதுவரைவழங்கப்படாத பகுதிகளுக்கும் கிடைத்தது

சாவகச்சேரி, ஆக. 26
இந்திய நிவாரண உதவிப் பொருள்கள் வழங்கப்படாதிருந்த பகுதிகளுக்கு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தின் 14 கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்ட இப்பொருள் கொடுப்பனவுகளை உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம் பிள்ளை தொடக்கிவைத்தார்.

சீனி தவிர ஏனைய பொருள்களே வழங்கப்பட்டன. சீனி கிடைக்கவில்லையே என பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் 23 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (இ-31)

## வயிற்றோட்ட நோயினால் இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 26
வயிற்றோட்ட நோயினால் திங்கள் மேலும் இரண்டு குழந்தைகள் யாழ். ஆஸ்பத்திரியில் பலியானார்கள்.

இம்மாதத்தில் இதுவரை பதினைந்து குழந்தைகள் வயிற்றோட்ட நோயினால் இறந்துள்ளார்கள்.

அரியாலையைச் சேர்ந்த எஸ். மயூரன் (3 மாதம்) பண்டத்தரிப்பைச் சேர்ந்த எஸ். அஜந்தன் (6 மாதம்) ஆகிய இருவருமே நேற்றும் மரணமானார்கள்:

தொடர்ந்தும் பல குழந்தைகள் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

## தாய்மார் முண்டியடிப்பு

கல்முனை, ஆக. 26
கல்முனையில் இயங்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் காரியாலயத்தில், கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள் பற்றிய விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

ஒலிபெருக்கி மூலம் கிராமம் கிராமமாக புலிகள் வேண்டுகோள் விடுத்ததையடுத்து பிள்ளைகளை இழந்த தாய்மார் முண்டியடித்துக்கொண்டு பதிவு செய்கின்றனர். (ஒ 84)

DIPLOMA COURSES

NURSING–தாதிப்பயிற்சி நெறியில் டிப்புளோமா
and
PHARMACY–பாமஸி பயிற்சி நெறியில் டிப்புளோமா

புதிதாக ஆரம்பமாகியுள்ள மேற்படி பயிற்சி நெறியில் பயில்பவர்கள் உடன் தொடர்புகொள்க.

★ NORTH CEYLON ★
TECHNICAL INSTITUTE
14, ST. PETERS LANE,
JAFFNA

கேள்விப்பத்திரம்

Lanka Cement Limited
Kankesanthurai.

பொதி நிரப்பும் பகுதியிலிருந்து (PACKING PLANT)
துறைமுகத்திற்குச் (HARBOUR
சீமெந்து கொண்டு செல்லுதல்.
லொறியிலிருந்து இறக்குதல்.
கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல்.
ஆகியவற்றிற்கான கேள்விப் பத்திரம்(TENDER)

TENDER No: LCL/H/T/01/87

காங்கேசன்துறையில் உள்ள எமது சீமெந்துத் தொழிற்சாலையின் பொதி நிரப்பும் பகுதியிலிருந்து (PACKING PLANT) துறைமுகத்திற்குச் (HARBOUR) சீமெந்து கொண்டு செல்லுதல், லொறியிலிருந்து இறக்குதல், கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல் ஆகியவற்றிற்கான கேள்விப் பத்திரங்கள் (TENDERS) கோரப்படவுள்ளன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் (Tender-Documents) விநியோக அதிகாரியின் காரியாலயத்தில் சாதாரண வேலை நாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-00 வரையிலும் 29-8-87 சனிக்கிழமை பகல் 12-00மணிவரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 03 - 09 - 87 மாலை 4-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 04 - 9 - 1987 முற்பகல் 10-00 மணிக்கு கேள்விப்பத்திரதாரர் முன்னிலையில் திறக்கப்படும்

பிரதிப் பொதுமுகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
22.8.1987 காங்கேசன்துறை.

மட்டக்களப்பில்

## அடிக்கடி இடம்மாறும் சமாதானப் படையினர்

மட்டக்களப்பு, ஆக. 26
மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களிலுள்ள இந்திய சமாதானப் படையினர் நிரந்தரமாக ஓரிடத்தில்முகாமிட்டு இருப்பதில்லை. அடிக்கடி இடம்விட்டு இடம்மாறிச் செல்கிறார்கள்.

அவர்கள் எந்தவொரு அரச, தனியார் கட்டடங்களையும் பயன்படுத்தாமல் வயல்வெளிகள் காடுகளில் முகாமிட்டுத் தங்கியுள்ளார்கள்.

எந்த ஒரு தேவையையும், வெளியார் உதவியின்றித் தாமாகவே சுயமாகப் பூர்த்தி செய்கிறார்கள். அரசமட்டத்தில் வழங்கப்பட்ட நீர், மின்சார வசதிகளைக்கூட ஏற்க மறுத்துள்ளார்கள். தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை முகாம்களில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள இவர்கள் இந்திய உணவுகளையே தயாரித்து உண்ணுகிறார்கள்.

இவர்கள் நிலையாக ஓரிடத்தில் முகாமிடா விட்டாலும் பிரதான இணைப்பு நிலையம் ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான மன்ரசாவில் இயங்கி வருகிறது.

பொது மக்கள் புகார்கள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. ஆனால்சிவில் நிர்வாகம் தொடர்பான புகார்களை வழமைபோல் பொலிஸ் நிலையங்களில் முறையிடுமாறு பணிக்கிறார்கள். (ஒ-21)

## நகரில் கடற்படை வீரர்கள்

குருநகர், ஆக. 26
இந்தியக் கடற்படை வீரர்களும் வாகனங்களில் யாழ்ப்பாண வீதிகளில் உலா வருகின்றனர்.

காங்கேசன்துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள இந்தியக் கடற்படையினர் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக யாழ்நகருக்கு வந்து செல்கின்றனர்.

இதற்கிடையில் இந்திய வேவு பார்க்கும் விமானம் ஒன்றும் திங்கள் காலை நகரப் பகுதிகளில் வான்வலம் சென்றது. அன்று மாலையும் ஹெலிகொப்டர் ஒன்று யாழ்நகரின் மீது நடைபெற்றது. (உ-51)

## நகரக் கடைகளின் திருத்த வேலை துரிதம்

குருநகர், ஆக. 26
ஆஸ்பத்திரி வீதி, கே. கே. எஸ். வீதி, சத்திரத்துச் சந்தி, மரக்கறிச் சந்தை, சுப்பர் மார்க்கட்,வாழைப்பழக்கடை, பாய்க்கடை பகுதிகளில் 'பொம்மர்', 'ஷெல்' தாக்குதல்களில் சேதமடைந்த கடைகளின் திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தனியார், மாநகர சபைக் கட்டடங்களை வைத்திருந்த கடைக்காரர்களே அவற்றைத் தமது செலவில் திருத்தி வருகின்றனர்.

சின்னத்துரை அன்சன்ஸ் முன்பாக 'பொம்மர்' தாக்குதலில் உடைந்து மூடப்பட்டுள்ள பிரதான குடிதண்ணீர் குழாயில் இருந்து குடிதண்ணீர் வெளியேறுவது இன்னும் நிற்கவில்லை. மின். தொலைதொடர்புக் கம்பிகளும் அறுந்து அப்படியே கிடக்கின்றன. (உ-51)

## நியமனம்

சாவகச்சேரி, ஆக. 26
சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விஷேட சேவை அலுவலர்களாகக் கடமையாற்றிய பன்னிரண்டு பேர் செப்டம்பர் மாதமுதல் கிராமசேவை அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள் சி.எஸ். துரைராசா, க. செல்வராசா, பொ. திருநாவுக்கரசு, வ. சிவசுப்பிரமணியம், தி. மகாலிங்கம், த. பாலசிங்கம், சு. தங்கமயிலோன், தி. சச்சிதானந்தம், சி.யோகராசா பொ. நவரத்தினராசா க. நடராசமூர்த்தி, த. வேலாயுதபிள்ளை ஆகியோரே மேற்படி பன்னிருவருமாவார். (இ-எ)

## தீவுப்பகுதி பாடசாலைகளும் கொத்தணியின்கீழ்

நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய தீவுகளிலுள்ள எட்டுப்பாடசாலைகள் கொத்தணி அமைப்பின்கீழ்கொண்டு வரப்பட்டுள்ளன.

கொத்தணி அதிபராக நயினாதீவு மகா வித்தியாலய அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை நியமிக்கப்பட்டு உள்ளார். (ஒ)

## உறுதி மொழிகளைப் பெற்ற பின்னரே ஒப்பந்தத்தை ஏற்றோம்

### ஈ.என்.டி.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 26
இந்தியப் பிரதமரிடம் பல உறுதி மொழிகளைப் பெற்றபின்பே ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டோம்.

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணிப் பிரமுகர் மனோ மாஸ்டர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நாம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்திற்கு இந்தியப் பிரதமரிடம் பல உறுதிகளைப் பெற்றபின்னரே சம்மதத்தைத் தெரிவித்தோம்.

அதுவும் இந்த ஒப்பந்தம் ஒரு தற்காலிக அல்லது இடைக்காலத் தீர்வாக இருக்கும் என்றே [illegible] என்று அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கிராமங்களில் இயக்கத் தடை!

அம்பாறை, ஆக. 26
அம்பாறை மாவட்ட முஸ்லிம் பகுதிகளில் சேவையாற்றிய ஊர்காவல் படையினருக்கு கிராமங்களில் இயக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

விரும்பினால் இரவு நேரங்களில் பொலிஸ் நிலையங்களில் காவல் பணியில் ஈடுபடலாம் என அவர்கள் பணிக்கப் பட்டுள்ளனர். (ஒ-14)

New Master Institute
Navalar Road, Jaffna.
G. C. E. A/L 1988.
Physics - Varnam
✶ HEAT ✶
ஆரம்பம்:- 29-8-87
நேர அட்டவணை:
Sat. & Sun. 7-30 — 8-30 a. m.

Short - Hand
&
Typing classes

தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

London Pitman Dcember 1987
பரீட்சையில் தேர்ச்சிபெற

North Ceylon
TECHNICAL INSTITUTE
14, St, Peter's Lane,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பொய்யை மெய்யாகக் கருதி மாளும் வழியைத் தேடிக் கொள்ளாதே.

— பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல - 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
26 8 1987 த. பெ இல - 23

## மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை, வாக்குரிமை

மலையகத் தமிழரை இந்தியாவுக்கு அனுப்புவது சம்பந்தமான பிரச்சினையை மீளாய்வு செய்யவேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தக் கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைத்துள்ளது

மலையகத்தில் வாழும் சகல தமிழருக்கும் தாமதமின்றிப் பிரசா உரிமை வழங்க வேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை இந்தக் கோரிக்கையை முன்வைத்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு உட்பட்டுப் போராட்டம் நடத்த ஈழவர் முன்னணி முடிவு செய்திருக்கிறது

வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களின் பிரச்சினை கருக்கொள்வதற்கு முன்னரேயே உருவெடுத்தது மலையகத் தமிழர் பிரச்சினை இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் சிங்களத் தலைவர்கள் முதலில் மலையகத் தமிழர்கள் மீதுதான் கை வைத்தார்கள் அதுவே இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரையும் நசுக்கவும், அடக்கி ஆளவும் சிங்கள அரசுகள் விரித்த புத்தகத்தின் முதல் அத்தியாயம்.

சரியாக முப்பத்தொரு வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட இப் பிரச்சினை, இந்திய, இலங்கைத் தலைவர்களுக்கு இடையே இரண்டு பெரிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தான போதிலும் இன்னும் தீர்ந்த பாடாக இல்லை. 1964, 1974 ஆம் ஆண்டுகளில் கைச்சாத்தான ஒப்பந்தங்களுக்குள் அடங்காதவர்களுக்கு (94 லட்சம் பேருக்கு) இலங்கைப் பிரசா உரிமை வழங்குவதற்குச் சென்ற வருடத்தில் சட்டம் ஒன்றும் இங்கு இயற்றப்பட்டது. ஆனால் அதுவும் இன்னமும் அமுலுக்கு வந்ததாக இல்லை

மொத்தத்தில் பல லட்சம் மலையகத் தமிழர்கள் குடியுரிமை இல்லாத அரசியல் அநாதைகளாக வாழ்கிறார்கள். தமது பிறப்பிடம் பிறந்த மண் இலங்கைதான் எனத் தெரிந்தும், ''இனி எங்கு வாழக் கதியோ?'' என்ற அவலமான நிலையில் வாழ் நாட்களைக் கடத்துகிறார்கள்.

இத்தனைக்கும் மலையகத் தமிழர்களால் தான் இந்த நாடே வாழ்கிறது. நாட்டுக்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியில் ஆகக் குறைந்தது என்பது சதவீதத்தை யாவது அவர்களே உழைத்துக் கொடுக்கிறார்கள்

1964 ஒப்பந்தப்படி இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட மலையகத் தமிழர்களில் பெரும் எண்ணிக்கையானோருக்கு அங்கு சொந்தம் இல்லை; உறவு இல்லை; உடைமை இல்லை! வேற்று நாடு ஒன்றுக்குக் குடிபெயர்ந்தவர்களாக அவர்கள் அங்கு மேலும் கஷ்டமுறுகிறார்கள்.

இதில் இன்னும் பெரிய அவலம் என்னவென்றால், 23 வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்பி இருக்க வேண்டியவர்கள் அவ்வாறு செய்ய முடியவில்லை. இங்கேயே வாழ்கிறார்கள்.

ஒப்பந்த அமுலில் இலங்கை, இந்திய அரசுகள் காட்டிய தாமதத்தாலும், அது விடயத்தில் அவை இரண்டும் அடிக்கடி பிணக்குப்பட்டுக் கொண்டதாலும், தமது நிரந்தர வாழ்க்கை இக்கரையிலா அக்கரையிலா என்ற நிச்சயமற்ற, விரக்தி அடைந்த நிலையில் பல மலையகத் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள்.

இவ்வாறான ஒரு இரண்டும் கெட்டான் நிலையில் தமது வாழ்க்கையை ஓட்டும் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை நிச்சயம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். அதனையே இ. தொ. கா. இந்திய அரசிடம் வலியுறுத்தி இருக்கிறது.

பிரச்சினை மீளாய்வு என்பது, இதுவரை இந்தியா திரும்பியவர்களை விட, எஞ்சியும், நிச்சயமற்றும் இலங்கையில் வசிக்கும் சகல மலையகத் தமிழர்களுக்கும் இலங்கைப் பிரசா உரிமை வழங்க வகை செய்வதாக அமைய வேண்டும். 1964 ஒப்பந்தம் காலாவதியாகி விட்டதால் இப்போது இங்கு வாழ்பவர்கள் சகலருக்கும் இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டாக வேண்டும்.

மலையக மக்களை மந்தைகளாகக் கருதி ''இங்கு இரு, அங்கு வா'' என்று கட்டியிழுக்க இனியும் அனுமதிக்கக் கூடாது. அவர்களுக்குத் தாமதம் இன்றிக் குடியுரிமை வழங்க இந்தியா வகை செய்ய வேண்டும்; குடியுரிமை மட்டுமல்ல வாக்குரிமையும் சேர்த்து வழங்கப்படவேண்டும்.

மலையகத் தமிழர் அனைவருக்கும் உடனடியாக இலங்கைக் குடியுரிமை வழங்க ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தின் அனுபந்தமாக, உப ஒப்பந்தம் ஒன்று செய்யப்படலாம்.

ஒப்பந்தம் வெறும் காகிதமாக மட்டும் இருக்காமல் கண்டிப்புடன் நடைமுறையாகவும் இந்தியா பார்த்துக் கொள்ள இது நல்ல சந்தர்ப்பம்.

# ஆயுத பரிகரணத்தில் தான் உலகின் பாதுகாப்பு

## இராணுவ பலத்தில் அல்ல

### மாநாட்டில் நட்வர்சிங் உரை

வாஷிங்டன், ஆக. 25

ஆயுத பரிகரணத்திலும் அபிவிருத்தியிலும் தான் உலகத்தின் பாதுகாப்பு தங்கியுள்ளது; இராணுவ பலத்தில் அல்ல-

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ நா. ஆதரவில் கடந்த திங்கள் ஆரம்பமாகிய 'ஆயுத பரிகரணமும் அபிவிருத்தியும்' தலைப்பிலான மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. நட்வர்சிங் இக்கருத்தை வெளியிட்டார்.

மாநாட்டுத் தலைவராக திரு. நட்வர்சிங் தெரிவுசெய்யப்பட்டார். மாநாட்டில் 140 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். அமெரிக்கா கலந்து கொள்ள மறுத்துவிட்டது

இதைவிட 200க்கு அதிகமாகத் தொண்டர் நிறுவனங்களும் கலந்து கொள்கின்றன.

ஐ நா. பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலர் பேசுகையில்;

அணு ஆயுதபரிகரணம் பற்றிய அமெரிக்கா — சோவியத் பேச்சுக்கள் விரைவில் வெற்றிகரமாக முடிவடையவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரை மாநாடு நடைபெறும். (ஒ-எ)

### ரஷ்யாவுக்காக உளவு பார்த்த

## அமெரிக்க வீரருக்கு 30 வருடச் சிறை!

வாஷிங்டன், ஆக. 25

சோவியத் யூனியனுக்கு உளவு பார்த்தவழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட அமெரிக்கக் கடற்படை வீரருக்கு அமெரிக்க நீதிமன்றம் நேற்று 30 ஆண்டுச் சிறைத்தண்டனை விதித்தது.

13 குற்றச் சாட்டுக்கள் இவ்வீரர் மீது சுமத்தப்பட்டிருந்தன.

மாஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணி புரிந்து வந்த சமயம் சோவியத் பெண் ஒருத்தியுடன் சிநேகம் வைத்திருந்ததுடன் அவர் மூலம் அமெரிக்கா சம்பந்தப்பட்ட இரகசியத் தகவல்களை சோவியத் உளவாளிக்கு உதவினர் என்பதே இவர் மீது சுமத்தப்பட்ட முக்கிய குற்றச் சாட்டுக்களாகும் (ஒ-எ)

## இறுதி முடிவு எடுப்பார்

மணிலா, ஆக.25

பிலிப்பீன்ஸ் அரசமைப்புக்கு முரணாக அமெரிக்கத் தளங்களில் அணு ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிப்பது பற்றி ஜனாதிபதி கொரஸோன் அக்கியூனோவே இறுதி முடிவு எடுப்பார்.

இப்படி ஆயுதப்படைகளின் தலைவர் ஜெனரல் பிடல் ராமோஸ் தெரிவித்தார்.

பிலிப்பீன்ஸ் கடற்பிராந்தியத்துக்குள் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அணுஆயுதங்களைக் கொண்டு வருவது தடைசெய்யப்பட வேண்டும். மணிலாவில் உள்ள அமெரிக்கத் தளங்களில் அணு ஆயுதங்கள் வைத்திருப்பதைத் தடை செய்ய வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து அணுஆயுத எதிர்ப்பு இயக்கங்கள் மணிலாவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றன.

## மாணவியைக் கொலை செய்த எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை

### சென்னை மேல் நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, ஆக 25

மலேசியாவைச்சேர்ந்த 20 வயதான வைத்தியக் கல்லூரி மாணவியைக் கொலை செய்த வழக்கில் இரண்டு சென்னை வாசிகளுக்கு சென்னை மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது.

சென்னை மஜிஸ்திரேட் நீதிமன்றம், நாகராஜன், வெங்கடேசன் ஆகிய எதிரிகள் மீது முதலில் விசாரணை நடத்தியது முடிவில் நிரபராதிகள் என்று கூறி விடுதலை செய்தது.

இது சம்பந்தமாக சென்னை மேல் நீதிமன்றத்துக்கு அரசு தரப்பினர் முறையிட்டனர்.

நீதியரசர்கள் எஸ். ரத்னவேல்பாண்டியன், டேவிட் அண்ணுசாமி ஆகியோர் மேன்முறையீட்டை விசாரித்தனர்.

அதன்பின்னர் இரண்டு எதிரிகளுக்கும் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கினார்கள்.

கொல்லப்பட்ட மாணவியின் பெயர் செல்வி மாலா (மல்லிகா) மலேசியா வாசி; அண்ணா நகரில் வீடு ஒன்றில் தங்கியிருந்து சென்னை வைத்தியக் கல்லூரியில் படித்து வந்தார்.

ஒருநாள் இரண்டு எதிரிகளும் மாணவியை மானபங்கப்படுத்திக் கொலை செய்தனர். (ஒ-எ)

### எர்ஷாத் கருத்து

நாடாளுமன்றத்துக்கு இடைக்காலப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும் சாத்தியக்கூறு பற்றி பங்களாதேஷ் அதிபர் முகமட் எர்ஷாத் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இடைத்தேர்தல் ஒன்று எதிர்ப்புணர்ச்சிகளை அகற்றும் என்றால் ஏன் அதை நடத்தக் கூடாது?— இப்படி ஜனாதிபதி எர்ஷாத் பங்களாதேஷ் வெளிநாட்டுச் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார். (இ-எ)

**வெளி உலகில்**

### காத்மண்டுவிலுள்ள

## அமெரிக்க தூதரை வெளியேற்ற வேண்டும்

### எம்.பிக்கள் வேண்டுகோள்

காத்மண்டு, ஆக. 25

அமெரிக்கத் தூதரை வெளியேற்ற வேண்டும் என்று நேபாள மன்னருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காத்மண்டுவில் உள்ள அமெரிக்கத்தூதர், நேபாளத்தின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக நேபாள எம். பிக்கள் பலர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதைத் தொடர்ந்தே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காத்மண்டுவில் நடந்த கூட்டம் ஒன்றில் அமெரிக்கத் தூதர் பேசினர்.

அப்போது நேபாள அரசாங்கத்தின் குறைபாடுகள் பற்றிக் கருத்து வெளியிட்டார்.

அதைக் காரணம் காட்டியே அமெரிக்கத் தூதர் வெளியேற்றப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது (ஒ-எ)

## இந்தியர் விஸா பெறவேண்டும்

சிங்கப்பூர், ஆக. 25

சிங்கப்பூர் செல்லும் இந்தியர்கள் இனி விஸா பெறவேண்டும்.

--இப்படி சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி முதல் இத்திட்டம் அமுலுக்கு வரும் என்று சிங்கப்பூர் அரசு உத்தரவு ஒன்று கூறுகின்றது.

(உ-எ)

# இந்தியத் துருப்புகள் எப்போது நாடு திரும்ப வேண்டும்?

## 'குமுதம்' ஆலோசனை

அத்தனை அரசியல் கைதிகளையும் ஜெயவர்த்தன விடுதலை செய்து விட்டால் மட்டும் போதாது.

இலங்கை நாடாளுமன்றம், ராஜீவ் - ஜெயவர்த்தன உடன்பாட்டுக்கு ஒப்புதல் அளித்தால் மட்டும் போதாது.

ஒப்பந்தத்தின்படி என்னென்ன வாக்குறுதிகள் அளிக்கப்பட்டனவோ அவை எல்லாம் நிறைவேற்றப்படும் வரை—

இலங்கைத் தமிழர்களின் உயிருக்கு அபாயம் துளியும் இல்லை என்ற நிலைமை ஏற்படும் வரை—

சிங்களவருக்கு இருக்கக்கூடிய ஜனநாயக உரிமைகளுக்குச் சற்றும் குறையாமல் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் உள்ள தமிழர்களுக்கும் உண்டு என்ற சட்டம் உறுதிப்படுத்தும் வரை—

இந்திய இராணுவம் தொடர்ந்து இலங்கையில் முகாமிடுவதுதான் நல்லது.

இலங்கைத் தமிழருக்கு மட்டும் அல்ல, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கே இது நல்லது.

எடுத்துக் கொண்ட காரியம், அரசியல் நியாயத்தின் அடிப்படையில் இலங்கையில்அமைதியை நிலைநாட்டுவதே.

அந்த வேலையை அரைகுறையாக விட்டுவிட்டு ஒருகாலும் இந்திய இராணுவம் திரும்பலாகாது.

திரும்பினால், முன்னைவிட ஒரு மோசமான நெருக்கடிக்கு ஆளாக நேரிடும். (இ-எ)

> 'போதாது' என்ற தலைப்பில் குமுதம் 20-8-87 இதழில் வெளியான ஆசிரியர் தலையங்கம் இங்கு பிரசுரமாகிறது;

### சீன அரசின்--...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

கடந்த அக்டோபர் மாதத்தில் இருந்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தி வரும் நல்லொழுக்கப் பிரசார நடவடிக்கைகள் கடுமையாக்கப் பட்டுவரும் அறிகுறியாக இந்த நாடு கடத்தல் உத்தரவு அமைந்துள்ளதாக மேற்குலக ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(அ-எ)

### பென்ஷன் தாமதம்

கொடிகாமம், ஆக 26

கிராமிய வங்கியில் பணம் இல்லாததால் பென்ஷன் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

கொடிகாமம் கிராமிய வங்கியில் தான் இந்நிலை ஏற்பட்டது.

அங்கு அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதால் வியாபாரம் நடக்கவில்லை. அதனாலேயே பணத்துக்குக் கஷ்டம் வந்ததாகக் கூறப்பட்டது. (ஒ-75)

**சமய சந்நிதிகள்**

### அத்திரான் முருகமூர்த்தி கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 26

நவாலி அத்திரான் முருகமூர்த்தி கோயில் மகோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

6-9-87 (ஞாயிற்றுக்கிழமை) சப்பறமும், 7-9-87 (திங்கள்) தேர்த் திருவிழாவும், 8-9-87 (செவ்வாய்) தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ)

### ப. நோ. கூ. சங்க ஊழியருக்கு போனஸ்!

மாவிப்பாய், ஆக. 26

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் சகல தர உத்தியோகத்தர்களுக்கும் இம்மாத வேதனத்துடன் நூறு ரூபா மேலதிக போனஸ் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-90

### அமிருக்கு...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலங்களை அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்தெறிந்து அரசியல் சாணக்கியம் மிக்க உரைகள் பலவற்றை அங்கு பலமுறை நிகழ்த்தினர்.

அவருடைய சொல்வன்மையையும், அஞ்சா நெஞ்சையும், ஆற்றலையும், அரசியல் ஞானத்தையும் பல பேரறிஞர்கள் பாராட்டிப் புகழ்ந்ததை எமது நெஞ்சமெலாம் நீங்காது நிறைந்து இன்றும் விளங்குகிறது.

-ஓர் அபிமானி

## ஒப்பந்தம் வெறும் பாலைவனம் என்பது விரைவில்தெரிந்துவிடும்

### கருத்தரங்கில் புலிகள் பிரமுகர்

திருநெல்வேலி, ஆக.26

பாலைவனத்தில் ஒரு பூஞ்சோலை போல இலங்கை-இந்திய ஒப்பந்தம் இப்பொழுது தமிழ்மக்களுக்குத் தெரிந்தாலும் அது முழுப் பாலைவனமாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை. எனவேதமிழ் பேசும் மக்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டியகாலம்வந்துவிட்டது. போராட்ட காலங்களில் தலைமறைவாக இருந்த மிதவாத சக்திகள் மீண்டும் தமிழ்ப் பிரதேசங்களுக்குள் பிரவேசிப்பதை தமிழ் மக்கள் அடையாளம் காணவேண்டும்.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போராளி, மாஸ்டர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாம் வைத்திருந்த ஆயுதங்களை ஒப்படைத்தாலும் எமது உறுதியில் இருந்து பின்செல்லவில்லை. எமது லட்சியத்தை அடையும்வரை நாம் போராடியே தீருவோம். இதுவே தலைவர் பிரபாகரனது உறுதி மொழியாகும் என்றும் அவர் கூறினர்.

(இ-143)

## ஒப்பந்தம் தமிழருக்கு முழுமையான வெற்றி அல்ல

### இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 26

இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழ்த் தேசிய இனம் ஈட்டிய முழுமையான வெற்றி என நாம் கருதவில்லை.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது,

இந்த ஒப்பந்தத்தை எமது சங்கம் மனநிம்மதியுடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்கிறது,

ஒப்பந்தம் செய்து கொண்டதுக்காக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பாராட்டுதலைத் தெரிவிக்கின்றது.

இது ஒரு தேசிய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் திருப்பமாக அமையும் என்று நாம் கருதுகின்றோம்.

இந்த உடன்படிக்கையை ஆதரிப்பதுடன் இந்த ஒப்பந்தத்திற்கும், இதை நேர்மையாகவும் முழுமையாகவும் செயற்படுத்தவும், உறுதியான ஆதரவு அளிக்குமாறு அனைத்து முற்போக்காளர்களையும், ஜனநாயக வாதிகளையும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சுயாட்சிக் கோட்பாடு அதன் பூர்வாங்கவடிவில் அல்லது மாறாக பூரண வடிவில் ஏற்கப்படவும். அமுல்படுத்தப் படவும் வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

இந்தப் பூர்வாங்க வெற்றியைச் சாத்தியமாக்கிய விடுதலைப் போராளிகளுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் சொல்லொணா அல்லல்களுக்குமத்தியிலும்உறுதி நாட்டிய மக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்:

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

### விடுவிப்பு

மட்டக்களப்பு, ஆக. 26

மட்டக்களப்புபொலிஸ் நிலையத்தில் கடந்த 6 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நீர்ப்பாசன பொறியியலாளர் குணநாயகமும் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஒ-21)

### சிரமதானம்

யாழ்ப்பாணம், ஆக. 26

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தினர், நிலைய ஆண்டு விழாவை முன்னிட்டு தலைவர் திரு. பொ. ஆறுமுகம் தலைமையில் நிலையச் சுற்றாடலைச் சிரமதானம் மூலம் துப்புரவுசெய்தனர்.

(ஒ)

### இவர்களுக்கு கிராக்கி

வடமராட்சி, ஆக. 26

மேசன்மார்களுக்கும், தச்சுவேலை செய்பவர்களுக்கும் வடமராட்சியில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சேதங்களைச் சீரமைக்க உள்ளூரில் மேசன்மார் இல்லாததால் வெளியிடங்களில் இருந்தும் கூட வந்து வேலை செய்கின்றனர். (ஒ-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

★ தரமான வர்ண நிழற்பட பிரதிகள்
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்

பெற்றுக் கொள்ளலாம்.

# உதயன்

26 - 08 - 1987 புதன்கிழமை

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/-மட்டுமே
★ நெகடிவ் (Processing) செய்தல் இலவசம்
★ விற்பனை - வர்ண நிழற்பட சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்தியாவில் இருந்து சிலீப்பர்கட்டை

புதுடில்லி, ஆக. 25 ரயில்பாதைகளைச் சீர் படுத்தத் தேவையான சிலீப்பர் கட்டைகளைப் பெறுவது குறித்துப் பேச்சுக்கள் நடத்த இலங்கை அரசுக்குழுஒன்று அடுத்த மாதம் இந்தியா செல்ல உள்ளது.

புதுடில்லியில் ரயில்வே அமைச்சர் மாதவராவ் இந்தியாவுடன் இலங்கை அமைச்சர் முஹம்மது நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. (இ-எ)

## மின் தாக்கிஞல் 17 பயணிகள் பலி

லக்னோ, ஆக. 26 மின்சாரம் தாக்கி பஸ் பயணிகள் 17 பேர் உயிரிழந்தனர்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

தமிழர் தலைவர்
நாவலர்
அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்
அவர்களின்
60வது பிறந்த தினத்தை முன்னிட்டு
★ எமது வாழ்த்துக்கள் ★
தமிழினத்திற்கு மேலும் சேவை செய்து
பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.
இங்ஙனம்
கலை, கலாச்சார ஒன்றியம்
பண்ணாகம்.

## பிரயாண ஒழுங்குகள்

☆ சவூதி அரேபியா ☆

★ பின்வரும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட இருப்பதால் விருப்பமுள்ளவர்கள் 20-08-1987 க்குப் பிந்தாமல் தொடர்புகொள்ளவும்.


★ குறைந்தபட்சம் 3 வருட அனுபவம்

★ 1. CLERKS SR 1200 (Graduate)
★ 2. COMPUTER OPERATOR SR 1500 (Diploma / Certificate)
★ 3. MECHANICS SR 1500 (H. E. M./L. V. M.) ,,
★ 4. MECHANICS SR 1500 ELECTRICAL ,,
★ 5. MECHANICS HYDRAULICS SR 1500 ,,
★ 6. MECHANICS AIR CONDITIONING SR 1500 ,,
★ 7. MECHANICS (GENERATORS) SR 1500 ,,
★ 8. TYRE REPAIRMAN SR 1000
★ 9. LABOURER FUEL ATTNDT SR 950
★ 10. LUBEMAN SR 950
★ 11. MECHANIST WELDER SR 1200
★ 12. AUTO BODY REPAIR SR 1200
★ 13. AUTO PAINTER SR 120-
★ 14. HEAVY DUTY DRIVERS SR 1200

1 SR. 7.45 RS
Labour Licence 96
Approval No. AL/96/13/87

Head Office:
Construction & Development Company Ltd.
87, S. De S. Jeyasinghe Mawatha,
NUGEGODA.

தொடர்பு:-
V. P. பாலசுப்பிரமணியம்
(V. P. BALA)
C/o N.V. பொன்னுத்துரை
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.



கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தியது. கூட்டத்துக்கு வந்திருந்த மக்களையும், முன்னணியில் பிரமுகர் ராஜன் பேசுவதையும் படங்களில் காணலாம்.

## ஊரெழு மீனுட்சி அம்மன் மகோற்சவத்தை முன்னிட்டு இலக்கியவிழா

யாழ்ப்பாணம், ஆக. 26 இன்று ஆரம்பமாகும் ஊரெழு ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலய மகோற்சவத்தைமுன்னிட்டுஇன்று முதல் தினமும் இலக்கிய விழா நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

இன்று கொடியேற்றமும் 8ஆம் திகதி தேர்த் திருவிழாவும்,9ஆம்திகதி தீர்த்தமும், 10ஆம்திகதி பூங்காவனமும் நடைபெறும்

திருவிழாக் காலத்தில் முதல் 12 நாட்களும் இராமாயணத் தொடர் சொற்பொழிவும், இறுதி நான்கு நாட்கள் பட்டி மண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், மேன்முறையிட்டு வழக்காடு மன்றம் என்பனவும் நடைபெறும்.

தொடக்க நாளான இன்று 'ஒருவனைத்தருதி' என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் உரையாற்றுவார்.

அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையுரையும், தஞ்சைப்பல்கலைக்கழக சிறப்பாய்வாளர் திரு. க.வீரகத்தி தொடக்கவுரையும் நிகழ்த்துவர். (உ)

## மோதலைத்தடுத்----

(1ம் பக்கத் தொடர்ச்சி) சுற்றுடலில் உள்ள தமிழ்மக்கள் வேறுஇடங்களுக்குச் சென்று தங்கினர்.

இதேவேளை ஞாயிறு இரவு பூராவும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததனல் நகரம் இருளில் மூழ்கியிருந்தது.

இதேவேளை திங்கட்கிழமை காலையில் திருமலை ரயில் நிலையத்திற்குச் சென்று திரும்பிய வாடகைக் காரொன்று மடத்தடியில் வழிமறிக்கப்பட்டு சாரதி தாக்கப்பட்டதுடன், காரின் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டன.

இதனையடுத்து வாடகைக் கார்ச் சாரதிகள் ஒன்றுசேர்ந்து ஊர்வலமாகச் சென்று நகரசபை மண்டபத்தில் இயங்கும் பொதுசனத் தொடர்பு நிலையத்தில் முறையிட்டனர்.

திங்கள் காலையில் திருமலை இணைப்பதிகாரி, அமைதிகாக்கும் படையினரின் உயர் அதிகாரிகள், அரசாங்க அதிபர் ஆகியோர் மடத்தடிக்குச்சென்று அங்குவாழும் மக்களுடன் உரையாடினர். இச்சம்பவத்தையடுத்து நகரில் பதற்றம் நிலவியது. (உ-150)

## சிவகுமார் பிறந்ததினக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஆக. 26 தியாகி பொன் சிவகுமாரனின் பிறந்த நாளை நினைவு கூரும் பொருட்டு இன்று மாலை 4 மணிக்கு உரும்பிராய்சிவகுமாரன் சிலையருகே பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது

திரு. கருணனந்தசிவம் செல்வி. சிவாநிதி முத்துலிங்கம் உட்பட மற்றும் பல தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் உரையாற்றுவர். (உ)

## இந்தியப்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி) அலுவலகங்கள் முன் தொடர் உண்ணாவிரதம் அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதற்காக அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த விடுதலையடைந்தவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

பூஸா முகாமுக்கு கடந்த 8 ஆம் திகதி இந்திய அதிகாரிகள் சென்றிருந்த போது ஏனையோர் இம்மாதம் 18ஆம் திகதி விடுதலை செய்யப்படுவர் என்று உறுதிமொழி அளிக்கப்பட்டது. (உ-எ-150)

## போட்டிக்கு...

எடுக்கப்பட்டு வரும் முயற்சியே இது.

இப்படி பிரதமரின் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் திருப்தி தருவதாகவும் தனித்துவமானதாகவும் அமைந்திருப்பதாக பிரதமர் தெரிவித்திருந்தார் என்று அப் பேட்டியில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இப்பேட்டிக்கு இந்திய வானெலி தனது செய்தி அறிக்கையில் முக்கியத்துவம் கொடுத்திருந்தது. (இ-எ)

## இலங்கை- இந்திய ----

(1-ம்பக்கத் தொடர்ச்சி) பாடுகளோ மோதல்களோ ஏற்பட்டது கிடையாது.

கேள்வி:- யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு எதிர்ப்புகள்உருவாகுமா?

பதில்:- ஜனநாயக ரீதியில் எதிர்ப்பு ஏற்பட்டாலும், ஆயுத ரீதியில் எதிர்ப்பு ஏற்பட்டாலும் சமாளிப்போம். எனினும் எதிர்ப்புகள் ஏற்படுவதற்கு காரணம் இருக்காது என்றே நம்புகிறோம்.

கேள்வி:- இந்திய இராணுவப் பாதுகாப்புடன் ஏன் வந்தீர்கள்?

பதில்;- எம்மிடம் ஆயுதம் எதுவும் இல்லை. நிராயுதபாணிகளாகவே உள்ளோம். இதன் காரணமாகத்தான் இந்திய இராணுவத்தை நாடினேம். அதுவும் தற்காலிகமானதே.

கேள்வி:- இலங்கை-இந்திய ஒப்பந்தம் குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்:- இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒப்பந்தத்தில் சில திருத்தங்களைச் சொன்னேம். இதன்படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக்கூடாது. சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். மலையகத்திலுள்ள இரண்டரை லட்சம் மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும்; வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று கோரினேம்.

கேள்வி:- தேர்தல் நடந்தால் போட்டியிடுவீர்களா?

பதில்,- அதைப்பற்றி நாம் சிந்திக்கவில்லை,

கேள்வி;- உங்கள் பொது நோக்கம் என்ன?

பதில்:- ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் நடத்திய அட்டூழியங்களினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வு அளிப்பதே எமது முக்கிய நோக்கம்.

கேள்வி:- ஏனைய இயக்கங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

பதில்:- நடந்துமுடிந்த கசப்பான நிகழ்ச்சிகளை மறந்து அனைவரும் ஒன்றுபட்ட தலைமையில் திரளவேண்டும்.

பொது மக்களை நல்ல வழியில் நடத்திச் செல்ல வேண்டும்.

இதில் சகல இயக்கங்களும் பங்கு எடுக்கவேண்டும். ஒவ்வொரு இயக்கத்துக்கும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உருவாக வேண்டும். அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வோம்.

## வெங்கட் முகம்மது சந்திப்பு

புதுடில்லி, ஆக. 26 இலங்கை அமைச்சர் எம். எச். முகம்மது புதுடில்லியில் ஜனதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேசினர்.

இந்திய-இலங்கை நல்லுறவு பற்றி இருவரும் பேசினர். (அ-எ)

## உலக வங்கி விசேஷ குழு வருகிறது

உலக வங்கியின் விசேட குழு ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதி கொழும்பு வரவுள்ளது.

ஒரு வாரம் கழித்து சர்வதேச நாணயச் சபையின் விசேட குழுவும் கொழும்பு வரும்.

வன்செயல்களினல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை நேரிற் பார்வையிட்டு புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு நிதி ஒதுக்குவது பற்றி பரிசிலனை செய்யுமுகமாகவே இந்த விசேட குழுக்கள் வருகின்றன.

இப் பணிகளுக்கு 51½ கோடி டாலர் நிதிஉதவி தேவைப்படும் என்று நிதி அமைச்சர் ரொனி டிமெல் தெரிவித்திருக்கின்ருர்.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கொழும்பு இராஜதந்திரிகளை நேற்று நிதி அமைச்சர் சந்தித்துப் பேசினர். (இ-எ)

## காவலில்

திருகோணமலை, ஆக 26 திருகோணமலை மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் 400க்கு அதிகமானேர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

ஆயிரத்து மூந்நூறுக்கு அதிகமான தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

விடுவிக்கப்படாதவர்களின் பெயர், விபரங்களை திருகோணமலைப் பிரசைகள் குழுவினர் சேகரித்து வருகின்றனர். (உ-எ-150)

## வீடுகளில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி) இந்திய அமைதிப்படை விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து திருமலை நகரில் வீடுகளில் புலிக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

இலங்கைப் பொலிஸார் வீதிகளில் ரோந்து சென்றுலும் கொடிகள் பற்றி இப்போது கவனம் செலுத்துவது இல்லை. (உ-எ-150)

## சூரிக்கு அஞ்சலி!

அன்பருக்கு அன்பராய்
ஆருயிர்த் தலைவராய்
வாடிக்கையாளர் நலன் விரும்பியாய்
குணத்தில் ஒளிரும் தீபமாக
கடமையே கண்ணாக
எல்லோருக்கும் இனியவராக
திகழ்ந்து அகால
மரணம் கண்ட
அருமைச் சூரியகுமாரனிற்கு
முதலாம் ஆண்டு
நினைவு தினத்தில்
எமது நெஞ்சு கனிந்த
அஞ்சலிகள்.

நிர்வாகத்தினரும்
ஊழியர்களும்

ஷப்ரு நிதிநிறுவனம்
யாழ். கிளை.

## ★ இருவருக்கும் ★ இதய அஞ்சலி



ச. சூரியகுமாரன்

✶ மலர்வு: 20-11-1952 ✶
● உதிர்வு: 24-08-1986 ●

எமது கிளையின் முகாமையாளராகப் பணி புரிந்து—
குணத்தின் குன்றாக—
பண்பின் சிகரமாக—
கடமையில் கண்ணியவானாகத் திகழ்த்த—
சுடரொளி சூரியகுமாரனுக்கும்—



வி. சத்தியபாமா

✶ மலர்வு: 03-02-1956 ✶
● உதிர்வு: 25-08-1986 ●

எமது கிளையில் அலுவலராய் பணி புரிந்து—
சாந்தமே உருவாக—
அடக்கத்தின் உறைவிடமாக—
ஆளுமையும் திறமையும் உள்ள அலுவலராகத் திகழ்ந்த—
செல்வி சத்தியபாமா விசுவலிங்கத்துக்கும்—

எங்கள் நெஞ்சம் மறவா இதய அஞ்சலிகள்

—நிர்வாகத்தினரும், ஊழியர்களும்—

ஹற்றன் நாஷனல் வங்கி
யாழ்ப்பாணக்கிளை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ... நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 26-08-1987 Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Wednesday August 26 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org